# கோவில்பட்டி நகராட்சி

# நகர்மன்ற

# சாதாரணக்கூட்டம்

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஐப்பசி திங்கள்-14, நாள்:-31.10.2023ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர்மன்ற தலைவர்
கோவில்பட்டி நகராட்சி

**கோவில்பட்டி நகராட்சி நகர்மன்ற**
**சாதாரணக்கூட்டம்**

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் புரட்டாசி திங்கள்-14, நாள்:- 31.10.2023ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்டம்.

முன்னிலை:-திரு.கா.கருணாநிதி
நகர்மன்ற தலைவர்

பொருள் எண்:-1

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை கடைகளை இடித்து அப்புறப்படுத்துவதில் பழுதடைந்த கட்டிடங்களில் உள்ள உபயோகப்படுத்த முடியாத நிலையிலுள்ள பொருட்களை 02.05.2023 அன்று ஏலமிடப்பட்டதில் 2 ஏலதாரர்கள் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு அதிகபட்ச ஏலக்கேள்வித் தொகை கேட்டுள்ளனர்.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் அதிகபட்சமாக கேட்ட ஏலத்தொகை. |
|---|---|---|
| 1. | P.மாரிமுத்துப்பண்டியன் | 45,500/- |
| 2. | H.முகமது இப்ராஹிம் | 45,000/- |

வரப்பெற்றுள்ள 2 ஏலதாரர்களில் அதிகபட்சமாக ஏலக்கேள்வித் தொகை கேட்டுள்ள P.மாரிமுத்துப்பண்டியன் அவர்களின் ஏலத்தொகையினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-679

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-2

கோவில்பட்டி நகராட்சியிலுள்ள துப்புரவு பணியாளர்கள குடியிருப்பு பகுதியில் உள்ள பழுதடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணியில் உபயோகமற்ற மரப்பொருட்களை 07.05.2023 அன்று ஏலமிட்டதில் 2 ஏலதாரர்கள் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு அதிகபட்ச ஏலக்கேள்வித் தொகை கேட்டுள்ளனர்.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் அதிகபட்சமாக கேட்ட ஏலத்தொகை. |
|---|---|---|
| 1. | S.அன்வர் பாஷா ABB Construction | 11,000/- |
| 2. | H.முகமது இப்ராஹிம் | 10,000/- |

வரப்பெற்றுள்ள 2 ஏலதாரர்களில் அதிகபட்சமாக ஏலக்கேள்வித் தொகை கேட்டுள்ள S.அன்வர் பாஷா ABB Construction அவர்களின் ஏலத்தொகையினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-680

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-3

கோவில்பட்டி நகராட்சி கணினி வரிவசூல் மையத்தில் உபயோகப்படுத்தி வந்த பிரிண்டர் பழுதடைந்துள்ளதால் புதியதாக 2 எண்ணம் Epson பிரிண்டர் 3 எண்ணம் வாங்கும் பணிக்கு 04.09.2023 அன்று கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில்

| | | |
|---|---|---|
| 1. | Sojourner Computers Kovilpatti | 73,470/- |
| 2. | Jai Computers Kovilpatti | 75,750/- |

வரப்பெற்றுள்ள 2 விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Sojourner Computers Kovilpatti நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-681

தீர்மானம்:-அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-4

கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு கீழ்க்காணும் விபரப்படி மூன்றாண்டு குத்தகை முடிவடைகிறது. எனவே ஆண்டு குத்தகை இனங்களை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஆண்டு குத்தகை இனத்தின் பெயர் | முடிவடையும் நாள் |
|---|---|---|
| 1. | அறிஞர் அண்ணா பேரூந்து நிலையம் கிழக்கு பகுதி கட்டன கழிப்பிடம். | 14.12.2023 |
| 2. | அறிஞர் அண்ணா பேரூந்து நிலையம் மேற்கு பகுதி கட்டன கழிப்பிடம். | 29.11.2023 |
| 3. | அறிஞர் அண்ணா பேரூந்து நிலையம் இருச்சக்கர வாகன காப்பகம். | 31.12.2023 |
| 4. | கூடுதல் பேரூந்து நிலையம் கட்டன கழிப்பிடம். | 31.01.2024 |

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9856/2014/அ3

தீர்மான எண்:-682

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-5

கோவில்பட்டி நகராட்சி 15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant)2022-2023-ன் கீழ் Tipper வாகனம் 2 எண்ணம் மற்றும் Bailing Machine 2 எண்ணம் வாங்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18277/22/EA-2 நாள்.30.08.2023-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட செய்தி மலர் (District Edition) தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்திடுமாறு 04.09.2023 அன்று கடிதம் மூலம் அனுப்பப்பட்டது. அதன்படி, இரண்டு பணிகளில் ஒரு(1) எண்ணம் பணியான Bailing Machine வாங்கும் பணிக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேலும் மற்றொரு பணியான Tipper வாகனம் வாங்கும் பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதனை மாவட்ட செய்தி மலர் (District Edition) தமிழ் நாளிதழில். வெளியிடுமாறு 03.10.2023 அன்று கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. அதன் படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ் சுடர் நாளிதழில் வெளியிட்டமைக்கான கேட்புத்தொகை ரூ16,800/- க்கு வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி பத்திரிக்கை நிறுவனத்திற்கு ரூ16,800/-யை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-683

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-6

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தும் வாகனம் எண்.TN96B5157-க்கு கிளட்ச் பிளேட் பழுதாகியுள்ளதால் பழுதுகளை நீக்கம் செய்யும் பொருட்டு இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் 12.10.2023ம் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. இதில் வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | N.A.ரஹமத்துல்லா, ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி. | 11,151 |
| 2. | சித்திக் ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், சர்வீஸ் லூப்ரிகேசன், 51 எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி. | 12,050 |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி குறிப்பிட்டுள்ள N.A.ரஹமத்துல்லா, ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி. விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், இதற்கான செலவினம் ரூ.11,151/-க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**3979/2023/எச்1

**தீர்மான எண்**:-684

**தீர்மானம்**:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்**:-7**

விண்ணப்பதாரர் திரு.வே.ஜெயசங்கர் த/பெ. வேலுச்சாமி என்பவர் கோவில்பட்டி நகர்மன்ற வார்டு எண்- 01, இளையரசனேந்தல் ரோடு , சர்வே வார்டு- A, பிளாக்- 1, நகரளவை எண்- 2/8 ல் 425.00 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் 933.63 ச.மீ பரப்பளவில் ஸ்டில்ட் தளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்ட புதிய வணிக ( கடைகள் ) கட்டிடம் கட்டுவதற்கு உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 47 -A. ன் படி சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பம் எண் SWP/BPA/0011280/2023 நாள் 06.10.2023 இல் மனை ஒப்புதலுடன் கட்டிடம் கட்டுவதற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்கண்ட கட்டிடம் கட்டுவதற்கு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49 ன் படி திட்ட அனுமதி மற்றும் திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133 (6) ன் படி கட்டிட அனுமதி வழங்குமாறு இணைய தளம் வழியாக சேவை கோரிக்கை எண் **137/CP/23-24/0002847** நாள் 09.10.2023 ன் படி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது மேற்கண்டவாறு கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட அனுமதி வேண்டி இணையதளம் வழியாக வரப்பெற்றுள்ள விண்ணப்பம் உள்ளூர் திட்டக்குழுமத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

விண்ணப்பதாரர் திரு.வே.ஜெயசங்கர் த/பெ. வேலுச்சாமி என்பவரால் மேற்கண்ட புதிய வணிக (கடைகள்) கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மனையிடம் நகரமைப்பு திட்டமில்லாத வணிக உபயோக பகுதியில் அமைகிறது. மேற்கண்ட உத்தேச மனையிடத்தில் கட்டிட வேலை துவங்கப்படவில்லை.மேற்கண்ட உத்தேச மனையிடத்தில் வணிக (கடைகள்) கட்டிடம் கட்டுவதற்கு நகர் ஊரமைப்பு துறையினர் மூலம் தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளதை அனுமதித்தும் மற்றும் விண்ணப்பதாரரால் சமர்ப்பித்துள்ள கட்டிட வரைபடம் அனைத்து கட்டிட விதிகளையும் திருப்தி செய்யும் வகையில் அமைந்துள்ளதால், அனைத்து கட்டணங்களையும் வசூலித்துக்கொண்டு ,தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள கட்டிட வரைபடத்தின்படியும் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் & பொது நிபத்னைகளுக்குட்பட்டும், மேற்கண்ட மனையில் கட்டிடம் கட்டுவதற்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49 ன் கீழ் திட்ட அனுமதியும் மற்றும் திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133 (6) ன் கீழ் கட்டிட அனுமதி வழங்குவதற்கு அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4149/2023/**எப்**1

தீர்மான எண்:-685

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:**-8**

விண்ணப்பதாரர்கள் திரு. ச,கிருஷ்ணகுமார், ச.பிரபுகுமார், த/பெ. சங்கரநாராயணன் என்பவர்கள் கோவில்பட்டி நகர்மன்ற வார்டு எண்- 20, எட்டையாபுரம் ரோடு , சர்வே வார்டு- B, பிளாக்- 11, நகரளவை எண்- 67 ல் 960.00 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் 1352.09ச.மீ பரப்பளவில் ஸ்டில்ட் தளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்ட புதிய வணிக அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 47 -A. ன் படி சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பம் எண் SWP/BPA/0011149/2023 நாள் 20.09.2023 இல் மனை ஒப்புதலுடன் கட்டிடம் கட்டுவதற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்கண்ட கட்டிடம் கட்டுவதற்கு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49 ன் படி திட்ட அனுமதி மற்றும் திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133 (6) ன் படி கட்டிட அனுமதி வழங்குமாறு இணைய தளம் வழியாக சேவை கோரிக்கை எண் **137/CP/23-24/0002681** நாள்26.09.2023 ன் படி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது மேற்கண்டவாறு கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட

அனுமதி வேண்டி இணையதளம் வழியாக வரப்பெற்றுள்ள விண்ணப்பம் உள்ளூர் திட்டக்குழுமத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

விண்ணப்பதாரர்கள் ச.கிருஷ்ணகுமார் மற்றும் ச. பிரபுகுமார் என்பவர்களால் மேற்கண்ட வணிக அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மனையிடம் நகரமைப்பு திட்டமில்லாத குடியிருப்பு பகுதியில் அமைகிறது.மேற்கண்ட உத்தேச மனையிடத்தில் கட்டிட வேலை துவங்கப்படவில்லை.மேற்கண்ட உத்தேச மனையிடத்தில் வணிக அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு நகர் ஊரமைப்பு துறையினர் மூலம் தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளதை அனுமதித்தும் மற்றும் விண்ணப்பதாரர்களால் சமர்ப்பித்துள்ள கட்டிட வரைபடம் அனைத்து கட்டிட விதிகளையும் திருப்தி செய்யும் வகையில் அமைந்துள்ளதால், அனைத்து கட்டணங்களையும் வசூலித்துக்கொண்டு, தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள கட்டிட வரைபடத்தின்படியும் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் & பொது நிபத்னைகளுக்குட்பட்டும், மேற்கண்ட மனையில் கட்டிடம் கட்டுவதற்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49 ன் கீழ் திட்ட அனுமதியும் மற்றும் திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133 (6) ன் கீழ் கட்டிட அனுமதி வழங்குவதற்கு அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4150/2023/**எப்**1

தீர்மான எண்:-686

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-9

கோவில்பட்டி நகராட்சி இளையரசனேந்தல் சாலையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அருகே புதியதாக கட்டிட பணிகள் முடியும் நிலையில் உள்ளதால் அதன் உட்பகுதியில் மூன்று உயர்மின் அழுத்த மின்கம்பங்கள் இடையூறாகவும் மற்றும் ஆபத்தான நிலையில் உள்ளதால் அதனை மாற்றி அமைக்க வேண்டி கடித வாயிலாக தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்கண்ட மின்கம்பங்களை அகற்றும் பணிக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், உதவி மின் பொறியாளர் நகர் வடக்கு பகிர்மானம், அவர்களிடம் இருந்து ரூ.8,13,540/- யை செலுத்திட கேட்பு வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட பணியை செய்திடும் பொருட்டு ரூ.8,13,540/- யை வரைவோலையாக தமிழ்நாடு மின்வாரியம் அவர்களுக்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-687
தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-10

கோவில்பட்டி நகராட்சியில் 15வது மாநில நிதிக்குழு 2021-2022 நிதியின் கீழ் ஸ்ரீ ராம் நகர் மற்றும் ஊரணி தெருவில் புதியதாக நகர்புற நலவாழ்வு மையம் கட்டப்பட்ட நிலையில், மேற்கண்ட கட்டிடங்கள் ஏற்கெனவே உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களிலிருந்து குறிப்பிட்ட தூர இடைவெளியில் அமைக்கப்படவேண்டும் என்ற விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என பொது சுகாதார துறையினரால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட 15 வது மாநில நிதிக்குழு 2021-2022 நிதியினை பயன்படுத்தி உரிய வழிமுறைகளை பின்பற்றி புதியதாக நகர்புற நலவாழ்வு மையம் அமைக்க மாற்று இடத்தினை சம்பந்தப்பட்ட Health and Family Welfare துறையினருடன் கலந்தாலோசித்து தேர்வு செய்து புதிய பணிகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 32454/2021/CFC-1நாள் 20.02.2023 மற்றும் 05.06.2023 களின் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இந்நகராட்சி வார்டு எண் -29, கதிரேசன் கோவில் தெரு எண் -9 சர்வே வார்டு- B, பிளாக்- 1, நகரபுல எண் -1 ல் ( Near By UPMS Matriculation School) அமைந்துள்ள மலை புறம்போக்கு பகுதி Health and Family Welfare துறையினருடன் 05.10.2023 அன்று கூட்டு ஸ்தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 150.00 ச.மீ பரப்பளவு பகுதி நகர்புற நலவாழ்வு மையம் அமைப்பதற்கு தகுதியான இடம் என தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட

இடத்தில் அப்பகுதி மக்களின் நலன் கருதி நகர்புற நலவாழ்வு மையம் அமைத்தல் போன்ற லாபமற்ற பணிகளுக்கு சிறப்பினமாக கருதி நிலத்தொகை இல்லாமல், மானியமாக நில உரிமை மாற்றம் செய்து உரிய ஆணை வழங்குமாறு கேட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தூத்துக்குடி அவர்களுக்கு முழு அளவில் பிரேரணை அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசிய அவசரத்தினை கருதி நில உரிமைமாற்றம் அனுமதி கோருதல் தொடர்பான பிரேரணை இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 4155/2023/எப்1 நாள் 16.10.2023 ன் படி மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கு

ந.க.எண் 4145/2023/எப்1
தீர்மான எண்:-688
தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-11

இந்நகராட்யில் 2019-2020 ஆம் ஆண்டு ஒப்பந்ததாரரான Treasure Envision மற்றும் ஸ்ரீவாரி என்ற நிறுவனம் பணிகளை ஒப்பந்தம் மூலம் மேற்கொண்டு பணிகளை முடித்து நகராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டு பட்டியல் தொகை பெறப்பட்டுள்ளது. தற்போது கீழ் கண்டவாறு பட்டியளில் படித்தம் செய்யப்பட்ட 5%மற்றும் 1% பட்டியளில் பிடித்தம் செய்யப்பட்டதை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகையானது இந்நகராட்சி காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது எனவே மேற்படி தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பணியின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1. | Treasure Envision | Supply of ceramic coated magnetic steel students writing board at bharathi nagar municipal middle school | 5300, 26419 |
| 2. | Treasure Envision | Supply and fixing of interactive smart class room (smart touch) infrastructure facilities includind wall painting for bharathi nagar municipal middle school | 9800, 48554 |
| 3. | Treasure Envision | Supply and fixing of HI-Fi modernaized interactive smart class room (smart touch) with softwares and other related facilities including AC and stabilizers floor walt and suppling necessary equipments for bharathi nagar municipal middle school. | 9900, 49322 |
| 4. | Sri Vari | Supply and erection of ceramic coated magnetic steel students writing board and automatic belling system at bharathi nagar municipal middle school. | 6700, 32630 |
| 5. | Sri Vari | Supply and erection of interactive smart class room (smart touch) infrastructure facilities at bunglow street school. | 9800, 48885 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2871/2023/பி3

தீர்மான எண்:-689

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-12

கோவில்பட்டி நகராட்சி அலுவலக தரைத்தலத்தில் உள்ள அலுவலக கூட்டரங்கில் நகராட்சி சம்பந்தமான மண்டல அளவிலான ஆய்வு கூட்டங்கள் மற்றும் அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஆய்வு கூட்டங்கள் நடத்துவதற்கு தேவையான அடிப்படை வசதிகளான

நாற்காலிகள், மேடை, ஒலி பெறுக்கி சாதனங்கள் மற்றும் தரைத்தளத்தில் உள்ள ஆண்கள் கழிப்பறையில் அலுமினிய தடுப்புகள் மற்றும் இதர வசதியள் செய்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.10.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-690

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-13

கோவில்பட்டி நகராட்சி அலுவலக தரைத்தளத்தில் உள்ள அலுவலக கூட்டரங்கில் நகராட்சி சம்பந்தமான மண்டல அளவிலான ஆய்வு கூட்டங்கள் மற்றும் அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஆய்வு கூட்டங்கள்தொடர்ந்து நடைபெறுவதால் ஆய்வுகூட்டத்திற்கு வரும் அலுவலர்கள், பிரமுகர்களுக்கு தேவையான குளிர்சாதனங்கள், Stabilizers, project Screen புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.4.40/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-691

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-14

கோவில்பட்டி நகரம், கோவில்பட்டி வருவாய் கோட்டம் மற்றும் வருவாய் வட்டாட்சியகத்தின் தலைமையிடமாக கொண்டு அமைந்துள்ளது. கோவில்பட்டி நகராட்சியானது அரசாணை எண் 361, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 11.02.1964 ன் படி 01.04.1964 முதல் கோவில்பட்டி மற்றும் இலுப்பையூரணி பகுதி ஆகிய கிராமங்கள் சேர்த்து மூன்றாம் நிலை நகராட்சியாகியுள்ளது. இந்நகரின் அன்றைய நாள் முதல் தற்போதைய பரப்பளவு 6.48 ச.கி.மீ. மற்றும் 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகரின் மக்கள் தொகை 95057 ஆகும், இந்நகராட்சியின் வளர்ச்சினை கருத்தில் கொண்டு அரசாணை ( நிலை) எண்

237 ந.நி (ம) கு.வ. துறை நாள் 02.12.2008 ன் படி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நகராட்சி தொழில் மையமாக முழுவளர்ச்சி அடைந்துள்ள நிலையில், இந்நகரின் வளர்ச்சிக்கு இணையாக வெகுமான மக்கள் குடியேற்றத்துடன் துரிதமான வளர்ச்சி அடைந்து வருவதினை கருத்தில் கொண்டும் மற்றும் மாநில அரசின் கூடுதல் மான்யங்கள் பெற்று இந்நகரின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் பல்வேறு மக்கள் நலனைச் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதின் அடிப்படையிலும், முந்தைய அரசு கடிதத்தை தொடர்ந்து , நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 27703/2017/எம்3 நாள் 11.03.2019.ல் தெரிவிக்கப்பட்டவாறு, கீழ்க்காணும் ஊரக உள்ளாட்சி பகுதிகளை கோவில்பட்டி நகராட்சியுடன் இணைத்து விரிவாக்கம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | உள்ளாட்சியின் பெயர் | இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஊராட்சிகளின் பெயர்கள் | பரப்பளவு ( ச.கி.மீ) | மக்கள் தொகை 2011 |
|---|---|---|---|---|
| **I** | கோவில்பட்டி நகராட்சி | - | 6.48 | **95057** |
| **II(1)** | - | இனாம் மணியாச்சி | 8.13 | **18258** |
| **(2)** | - | மூப்பன்பட்டி | 8.69 | **1031** |
| **(3)** | - | இலுப்பையூரணி | 9.66 | **18032** |
| **(4)** | - | திட்டங்குளம் | 8.28 | **9115** |
| **(5)** | - | பாண்டவர்மங்கலம் | 11.28 | **14954** |
| **(6)** | - | மந்திதோப்பு | 10.19 | **6143** |
| **(7)** | - | **நாலாட்டின்புதூர்** | 13.66 | **5030** |
| | | **மொத்தம் -II** | 69.89 | **72563** |
| | | **மொத்தம் - I & II** | 76.37 | **1,67,620** |

மேற்கண்டவாறு கோவில்பட்டி நகராட்சி எல்லைகளையொட்டியுள்ள வளர்ந்து வரும் பகுதிகளை இனம்கண்டு இணைக்கப்படும் நிகழ்வில், இத்தகைய எல்கை விரிவாக்கம் திட்டமிட்ட வளர்ச்சிக்கு உதவுவதற்கு வாய்ப்புள்ளது என்பதின் அடிப்படையில், நகரத்தன்மை வாய்ந்ததாகவும் மற்றும் பிற வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், மேற்படி பொருள் தொடர்பாக விரிவான செயற்குறிப்பு தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களின் பரிந்துரைகளின் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வழியாக அரசின் ஒப்புதல் பெற பிரேரணை அனுப்பி வைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. கோவில்பட்டி நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்திட வரிசை எண் 1 முதல் 7 வரையிலான கிராம ஊராட்சிகளை இந்நகராட்சியுடன் இணைப்பதற்குரிய விரிவான பிரேரணை அரசுக்கு அனுப்புவதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 3150 நாள் 29.06.2018 ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கு.

**ந.க.எண்** -9857/2010/**எப்**1

**தீர்மான எண்**:-692

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.